[2003 ஏப்ரல் 8

210—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

*10513—**திரு. கோ. இரவிராஜ்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி டி.புதூர் 9-வது வார்டுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக்கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருத்தணி பேரூராட்சிக்குட்பட்ட டி.புதூர் 9-வது வார்டுக்குத் தற்போது போதிய குடிநீர் வழங்கப்பட்டு வருவதால் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-50

திரு. கோ. இரவிராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறுபடை வீடுகளில் ஒன்றாகத் திகழும் திருத்தணி நகரத்திலே குடிநீர்த் தட்டுப்பாடு அதிகமாக இருக்கிறது. 21 நாட்களுக்கு ஒரு முறைதான் மக்கள் குடிநீரைப் பார்க்கக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. இது சம்பந்தமாகப் பேரூராட்சி செயல் அலுவலரைச் சந்தித்துக் குடிநீர் வினியோகத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டபோது நிதி இல்லையென்று சொன்னார். என்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலே இருந்து நான் பத்து இலட்சம் ரூபாய் நிதி வழங்கினால் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அவர் கூறினார். அதன் அடிப்படையிலே என்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலே இருந்து பத்து இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்து, லாரியின் மூலமாக நகரத்து மக்களுக்குக் குடிநீர் வழங்கப்பட வேண்டுமென்று நான் கேட்டபோது, அதற்கென்று அந்த நிதியைப் பயன்படுத்த முடியாது என்று அங்கே தெரிவித்தார்கள். அதற்குப் பின்னாலே நீங்கள்

2003 ஏப்ரல் 8]

எப்படியாவது குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லி வலியுறுத்தியும், நடவடிக்கை இல்லை என்கிற நிலை ஏற்பட்டதற்குப் பின்னாலே வேறு வழியில்லாமல், கடந்த 21 ஆம் தேதி நான் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை அங்கே துவக்க வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டது. அதற்குப் பின்னாலே மாவட்ட ஆட்சியாளர் நடவடிக்கை எடுத்து bore போடுகின்ற அந்தப் பணிகளை இன்றைக்குத் துவக்கியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல; இந்தப் பிரச்சினை தொடர்ந்து இருக்கக்கூடாது என்கிற நிலையை அறிந்ததற்குப் பின்னாலே, குறிப்பிட்டுச் சொன்ன 9-வது வார்டிலே மேல்நிலைத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் குறித்து என்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலே இருந்து 4½ இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஏழு மாத காலம் ஆகி இருக்கிறது. இதுவரையிலே தமிழ்நாடு குடிநீர் வாரியத்தின் மூலமாக அந்த நிதியைப் பயன்படுத்தக்கூடிய திட்ட மதிப்பீடு தயார் செய்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப் படவில்லை. எனவே உடனடியாக நான் ஒதுக்கீடு செய்திருக்கிற 4½ இலட்சம் ரூபாய்க்கான திட்ட மதிப்பீட்டை உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு அனுப்பி, அந்தப் பகுதியிலே மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி அமைத்து திருத்தணி நகர மக்களுக்கு...(மணியடிக்கப்பெற்றது) உதவ மாண்புமிகு அமைச்சர் முன்வருவாரா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் பதில் சொல்கிறார்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நான்கு ஆண்டு காலமாக பருவ மழை பொய்த்ததன் காரணமாக, இன்றையதினம் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு -- திருத்தணிக்கு பல்வேறு திட்டங்கள் மூலமாக திருத்தணி ஏரியில் வறட்சி நிவாரணத் திட்ட நிதியின்கீழ் மூன்று ஆழ்குழாய்க் கிணறுகளை அமைத்து, மின் மோட்டார் பொருத்தி மற்றும் ஜி.ஐ. பைப் அமைக்கும் பணிக்கு அரசால் 11-வது நிதிக் குழுவின் மூலமாக ரூ. 2.71 இலட்சம் பேரூராட்சிப் பொது நிதியின் மூலமாக ரூ.5.04 இலட்சம், மொத்தம் ரூ.7.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இந்தத் திட்டத்தினுடைய பணிகள் வெகு விரைவாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதன் அடிப்படையில், தற்போது நிலவி வரும் கடுமையான வறட்சியினால் அனைத்து வார்டுகளிலும் திட்டப் பணிகள் வெகுவிரைவாக முடிக்கப்பட்டு, திருத்தணி

பேரூராட்சிக்குப் போதுமான குடிநீர் அத்துணை வார்டுகளிலும் முழுமையாக வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு உண்டான தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக திட்டம் வரைவு மதிப்பீடு செய்யப்பட்டு உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஒப்படைக்கும்படி வேண்டுகோள் வைத்துள்ளார்கள். அதிலும் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொண்டு திட்ட மதிப்பீடு செய்து, அந்தப் பணிகளும் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய அரசின் மூலமாக நிறைவேற்றித் தரப்படும் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 211, திரு. இரா.தா. இன்பத் தமிழன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

211—

குடிநீர்

***12525—திரு. இரா. தா. இன்பத்தமிழன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவில்லிபுத்தூர் நகராட்சியில் குடிநீர்த் தட்டுப்பாட்டைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா.தா. இன்பத் தமிழன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நிதி ஆண்டில் ஸ்ரீவில்லிபுத்தூர் குடிநீர் வாரியத் திட்டத்திற்காக 9 கோடியே 89 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்த தாயுள்ளம்கொண்ட தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு என் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS